களையும் பார்த்தால், புரட்சித் தலைவர் முதலமைச்சராக ஆன பிறகு போடப்பட்ட உத்தரவுகள் ஒருங்கிணைந்து இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே அரசாணையாக போடப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட எந்த இடங்களில் நடைபெறவில்லை என்று சொன்னால் அரசு உடனடியாக நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தஞ்சை-கிழக்கு காயிதே மில்லத் மாவட்டம் என்று எப்போது தொடங்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிப்பது பற்றிய கேள்வி. நீங்கள் பொதுவாகக் கேள்வியைக் கேட்கலாம். அல்லது இந்தத் தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றிக் கேட்கலாம். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கும்போது...

திரு. ஆர். சிங்காரம்: பதில் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயாராக இருக்கிறது என்பது வேறு. இந்த நேரத்தில் கேட்பது சரியல்ல.

அடுத்த வினா எண் 7. திரு. கே. ஏ. மனோகரன். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

7- ஓசூரில் புதிய குடும்ப அட்டை வழங்குதல்.

* 1186—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓசூர் போன்ற புதிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில் குடும்பக் கார்டுகள் இல்லாமையால் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க புதிய குடும்பக் கார்டுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) புதிய குடும்பக் கார்டுகள் வழங்கப்படும்வரை தற்காலிகமாக உணவுப் பொருட்கள் வழங்க ஏதேனும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே,

1991 செப்டம்பர் 9]

(அ) தகுதியான நபர்களுக்கு, தகுந்த விசாரணைக்குப் பின் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) புதிய குடும்ப கார்டுகள் வழங்கப்படும்வரை தற்காலிகமாக உணவுப் பொருட்கள் வழங்க எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியமான பொருள்கள் அனைத்தும் ஒரே தவணையில் கொடுக்க அரசு ஆணை இருந்தும் கடைகளில் அப்படி மக்களுக்குக் கிடைப்பதில்லை. அது கிடைக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகிய நான்கு பொருள்கள் நம்முடைய ரேஷன் கடைகளில் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. அந்த 4 பொருள்களில் ஏதாவது கிடைக்கவில்லை என்று சொன்னால், அதற்கான புகார் வந்தால் அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடும்ப அட்டை இல்லாததால் பல குடும்பங்கள் உணவுப் பொருள்களை வாங்க முடியாமல் சங்கடப்படுகிறார்கள். அவர்கள் உணவுப் பொருள்களை வாங்குவதற்கு நிரந்தரமான அடையாள அட்டை வழங்கும் வரை கிராம நிர்வாக அதிகாரிகள் மூலமோ அல்லது வட்டாட்சியர் மூலமோ தற்காலிக அட்டை வழங்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய குடும்ப அட்டைகள் கூட, சென்ற ஆண்டு 95,428 வழங்கப்பட்டுள்ளன. ஆகவே குடும்ப அட்டைகள் இல்லை என்று ஏதோ ஒரு சில இடங்களில் புகார் வரக்கூடுமே தவிர நிரம்பப் புகார்கள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்ப அட்டைகள் முடிந்தவரையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான அம்பாசமுத்திரத்தில் மக்களின் குறைகளைக் கேட்க சென்ற நேரத்தில், ரேஷன்

கார்டுகள் இல்லை என்று என்னிடத்தில் நாலாயிரம் மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவைகளை நான் அம்பாசமுத்திரம் தாசில்தார் வசம் ஒப்படைத்து, அவற்றை விசாரித்து கார்டு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டேன். விசாரித்து விட்டேன், கார்டுகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனாலும் இன்னும் காலம் கடத்தப்படுகிறது. எனவே உடனடியாக அந்தக் கார்டுகளை 'வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் 100 சதவீதம் சரிபார்க்கச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கிறோம். ஏனென்றால் போலி கார்டுகள் நிறைய இருக்கின்றன. அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, புதிய குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில், வாக்காளர் பெயர்ப்பட்டியலில் அவர்களுடைய பெயர் இருக்கிறதா என்பதைப் பார்க்கிறோம். அவர் கொடுத்துள்ள விலாசத்தில் வசிக்கிறாரா என்பதைப் பார்க்கிறோம். இந்த விவரங்களையெல்லாம் பார்த்த பிறகு புதிய குடும்ப அட்டைகளைத் தருகிறோம். நான் ஏற்கனவே சொன்னது போல சென்ற ஆண்டுகூட 95,428 புதிய குடும்ப அட்டைகள் தரப்பட்டிருக்கின்றன. குடும்ப அட்டைகளே இல்லையென்று உள்ளபடியே தெரியுமானால் அதைத் தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே' குடும்ப அட்டைகள் தற்போது மாவட்ட விநியோக அதிகாரி அவர்களால் வழங்கப்படவேண்டும் என்று விதி இருக்கிறது. இதனால் ஒருவர் கார்ட் வேண்டுமென்று விண்ணப்பித்தால் 2 மாத காலம் அவகாசம் கூட தேவைப்படுகிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மாற்றி தாலுக்கா விநியோக அதிகாரிகளே கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உள்ள நிலையில் சில முறைகள் வைத்துத் தான் புதிய குடும்ப அட்டைகள் தந்து கொண்டிருக்கிறோம். ஆண்டுக்கு ஆண்டு குடும்ப அட்டைகள் பெருகிக்கொண்டு தான் இருக்கின்றன. ஒருவேளை, ஜனத் தொகை காரணமாக இருக்கலாம்; அல்லது புதிய குடும்பங்கள் உருவாவது

காரணமாக இருக்கலாம். அல்லது குடும்பங்கள் பிரிந்து போவது காரணமாக இருக்கலாம். எல்லாவற்றையும் சரிபார்த்து, முடிந்த அளவு வேகமாகக் குடும்பக் கார்டுகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி ஜி. மல்லிகா.

செல்வி ஜி. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் தொழில் நிமித்தம் மீன்பிடிப் பகுதிகளில் அடிக்கடி மாறி வாழ்வதால், அவர்கள் வாழ்கின்ற இடங்களிலேயே அவர்களுக்கு மட்டும் அத்தியாவசியமான அரிசி, கெரோசின் ஆகியவற்றை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, புதிதாக அவர்கள் குடிபெயர்ந்து வேறு எங்கேயாவது போவார்களேயானால் அந்தப் பகுதியில் உள்ள அலுவலர்களுக்கு அவர்கள் தெரிவிப்பார்களேயானால் அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கலாம். மீனவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் ஆங்காங்கே மாறிப் போகிற நிலைமை இருக்குமேயானால் அதை அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி,

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக்கார்டுகளில் கண்டுள்ள வருமானத்தை அடிப்படையாக வைத்துத் தான் ஐ.ஆர்.டி.பி. கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அதிலே கண்டுள்ள வருமானங்கள் உண்மையானவையா என்பதை அரசாங்கம் சரிபார்த்து இருக்கிறதா? அந்தக் குடும்ப கார்டுகளை எப்போது புதுப்பிப்பது என்பதற்கு ஏதாவது ஒரு ஆண்டு வரைமுறையை அரசாங்கம் வைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப கார்டுகளைப் புதுப்பிக்கிற வேலையை சமீப காலத்திலே தொடங்க வேண்டுமென்று அரசாங்கம் கருதிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல குடும்ப கார்டுகளிலே அவரவர்கள் வருமானத்தை அவர்கள் சொல்வதைத் தான் அநேகமாகக் குறித்து வைத்து இருக்கிறார்கள். அதையும் சரிபார்க்க வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. ஏனென்றால் நான் அறிந்த வரையில் பல பேர் ஆயிரம் ரூபாய்க்குள் இருந்தால்தான் பரவாயில்லை

என்று கருதி கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் எல்லா குடும்ப அட்டைகளும் அவர்களுடைய பொருளாதார நிலைமைகளைப் பார்க்காமல், கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மிகுந்த நகரங்களுக்கு, அருகாமையிலுள்ள மாவட்டங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக பெரும்பாலான மக்கள் தொழில் நகரங்களுக்கு வருகிறார்கள். அவர்கள் அவ்வாறு வரும்போது தங்கள் பகுதியிலிருந்து தங்களுக்குக் கொடுத்த குடும்ப கார்டுகளுடன் வருகிறார்கள். அவர்கள் புதிய பகுதிகளுக்கு வரும்போது நியாய விலைக் கடைகளில் அந்தப் பழைய கார்டுகளுக்கு பொருட்கள் வழங்கப்படுவது இல்லை. அந்த மாதிரி புதிதாகக் குடியேறிய மக்களுக்கு நகரங்களில் நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கொடுப்பதிலும் மற்றும் அட்டைகள் வழங்க காலதாமதம் ஏற்படுவதாலும் அவர்கள் பகுதிகளிலிருந்து கொண்டுவந்த அந்தக் குடும்பக் கார்டுகளை வைத்து அந்தந்த நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு ஊரில் இருக்கிற பழைய குடும்ப கார்டுகளைக் கொண்டுவந்து வேறு ஊரிலே சரக்கு வாங்குவது என்பது கடினமான காரியம். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. அதோடு கார்டுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் புதிதாக விண்ணப்பித்துத்தான் கார்டுகளைப் பெறவேண்டுமே தவிர பழைய கார்டுகளுக்குச் சரக்குத் தர வேண்டுமென்று கேட்பது முறையாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரை அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று தங்களுடைய வாழ்க்கையைக் கழிக்கின்ற சூழ்நிலையில் இருக்கின்ற, வறுமையில் வாடுகின்ற லட்சோப லட்சம் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் நியாயவிலைக் கடைகளை ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்து வைத்து உணவுப் பொருட்கள் வினியோகம் செய்து வந்தால், அந்த மக்களுடைய ஒரு நாள் ஊதியத்தை அவர்களுக்கு நாம் பெற்றுத் தருவதாக இருக்கும். எனவே இதனை அரசு தனது கவனத்தில் கொண்டு அதைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பல

1991 செப்டம்பர் 9]

மக்கள் ஒரே இல்லத்தில் பல குடும்பங்களாக வாழ்கின்ற ஒரு நிலை இருந்து வருகின்றது. எனவே உணவுப் பொருட்கள் வழங்குகிற அதிகாரிகள் விசாரணைக்குச் செல்லும்போது மீட்டரைப் பார்த்து விட்டு ஒரு மீட்டர்தான் இருக்கிறது என்று சொல்லிச் சென்று விடுகிறார்கள். எனவே அதையும் அரசு கவனத்திலே கொண்டு அப்படிப் பலபேர் சேர்ந்து வாழ்கின்ற குடும்பங்களுக்கும் தனித் தனியாக விநியோக அட்டைகள் வழங்க முன்னுரிமை அளிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஞாயிற் றுக்கிழமை விடுமுறை வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் விசாரித்தவரையில் முன்பு வெள்ளிக்கிழமை விடுமுறை விடப்பட்டு வந்தது. அது சரியாக இல்லை; ஞாயிற்றுக்கிழமை இருந்தால்தான் ரேஷன் கார்டு களுக்குச் சரியாக சரக்குகள் வைத்து இருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகளுக்கு வாய்ப்பாக இருக்கிறது. ஏனென் றால் வெள்ளிக்கிழமை அதிகாரிகள் வேலை செய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகளுக்கு விடுமுறையாக இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை கடைகள் திறந்து இருப்பதால் அதிகாரிகள் அங்கு போய்ப் பார்ப்பது இல்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் பெரிய தப்பெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. அதோடு தொலைக்காட்சியை நாங்களும் பார்க்கவேண்டுமென்று ரேஷன் கடைகளில் இருக்கிற ஊழியர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே, ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக அறிவிக்கப்பட்டு விட்டது.

(முற்பகல் 9-45)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் குடும்பக் கார்டுகளை வைத்திருக்கும்போது அந்த ஊரிலுள்ள சில மளிகை வியாபாரிகளும் மற்றவர்களும் அவற்றை அடகு பிடித்தும், அவர்களை மிரட்டியும் மொத்தமாக ரேஷன் கார்டுகளை கலெக்ட் பண்ணி மொத்தமாக அரிசி, பருப்பு மற்ற சாமான்களை வாங்கி கள்ள மார்க்கெட்டில் விற் கிறார்கள். ஆகவே, அதைத் தடுக்கும் பொருட்டு குடும்பத் தலைவரின் புகைப்படத்தை ஒட்டிய குடும்ப கார்டுகள் வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. அதைப்போல நடக்கிறது. ஆனால் புகைப்படம் எடுக்க நிறைய செலவாகும். ஆகவே அதை பிறகு பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தண்டாயுதபாணி

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப கார்டுகள் வழங்குகிறபோது அதைப் பரிசோதிப்பதற்காகச் செல்கிற அதிகாரிகள் காலை பத்து மணிக்குச் சென்று மாலையில் வந்துவிடுகிறார்கள். ஆனால் கூலி வேலைக்குச் செல்கிறவர்கள் காலையில் வேலைக்குச் சென்று மாலையில் வருகிறபோது அவர்களைப் பரிசோதனை செய்வதற்கு முடியாமல், அதிகாரிகள் அவர்கள் யாரும் இல்லையென்று சொல்லி குடும்ப அட்டைகளை கான்சல் செய்துவிடுகிறார்கள். ஆகவே, பரிசோதனைக்குச் செல்வதற்கு முன்பாக அந்தக் கூலியாட்கள் இருக்கிற சமயமாகப் பார்த்துச் சென்று பரிசோதனை செய்து அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வேண்டுகோள். ஆனால் அதிகாரிகள் 10 மணியிலிருந்து 6.00 மணி வரையில்தான் வேலை செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலே சில குறைபாடுகள் இருக்குமானால் எந்தப் பகுதியில் அப்படிப்பட்ட குறைபாடுகள் வருகிறதென்று சொன்னால் அதற்கான பரிகாரத்தை செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஏழை களைப் பொறுத்தவரையில், அதிலும் அன்றாடம் கூலி வேலை செய்கிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பாது காப்பு அளிப்பதுதான் இந்த அரசின் எண்ணமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக்காலத்தில் இலவச அரிசி என்ற பெயரால் ஏழை அரிசன மக்கள் போன்றவர்களுக்கு குடும்ப கார்டுகளில் குறைவாக 300 ரூபாய் என்று வருமானம் இருந்ததை, அதிகாரிகள் அதிகரித்து 900, 700 ரூபாய் என்று மாற்றி, அவர் களுடைய ' உண்மையான வருமானத்தை மறைத்து, இந்த அரிசி கிடைக்காமல் செய்திருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலித்து சரியான நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆகவே, அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டிய நிலைமை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8. திரு. அ. பாப்பா சுந்தரம், டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.